செ.கு. எண் : 174 நாள் : 09.11.2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை - 9 .11.2011

சென்னை, ராயபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. J.ஜெயகோபால் என்பவர் 6.11.2011 அன்று பணியில் இருந்த போது நெஞ்சுவலி ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் காலமானார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. J.ஜெயகோபால் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. J.ஜெயகோபால் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான உதவி ஆய்வாளர் திரு. J.ஜெயகோபால் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9